364—

தலையாமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கட்டிடம் கட்டுதல்.

*21039—**திரு. கு. சீனிவாசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, தலையாமங்கலம் அரசு மருத்துவமனை கட்டிட வசதியில்லாமல் வாடகைக் கட்டிடத்தில் இயங்குவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அதற்கான ஏற்பாடு எதுவும் இல்லை.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் அளித்தார்கள். மன்னார்குடி தொகுதி தலையாமங்கலம் அரசு பொது மருத்துவமனை கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக வாடகைக் கட்டிடத்திலே இயங்கி வருகின்ற காரணத்தினாலும், அந்த வாடகைக் கட்டிடமும் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கின்ற காரணத்தினாலும்--அந்த மருத்துவ நிலையம் மன்னார்குடியிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திலே அமைந்திருக்கிறது--அந்த மருத்துவமனையை விட்டால், அங்கு இருக்கின்ற 20 கிராமங்களுக்கு வேறு வழியில்லை என்கின்ற காரணத்தினாலும், அந்த மருத்துவ மனைக் கட்டிடம் பழுதடைந்த நிலையில் இருப்பதாலும், கட்டிடதாரர் அதை காலி செய்ய சொல்லுகின்ற காரணத்தினாலும், அதற்கான--இடம் அந்த கிராமத்தாரால் வாங்கி கொடுக்கப்பட்டிருக்கிறது--இடமும் இனாமாக வாங்கி கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அதற்கு கட்டிடம் கட்டித்தர முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை

1995 ஏப்ரல் 20]

ஏற்று, இந்த ஆண்டு அதை எடுத்துக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு இதற்கான கட்டிடம் கட்டுவதற்கான வேலைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அதே நேரத்தில், மன்னார்குடி நகரத்திலே, நாகை மாவட்டத்திலே, நாகை நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிலே மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மன்னார்குடி பொது மருத்துவமனையில் இடவசதி இல்லாததால், வேறு புதிய இடத்திலே புதிய வளாகம் கட்டிக் கொடுக்கப்படும் என்கின்ற ஆணையை பிறப்பித்து உடனடியாக வேலைகள் தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆகையால், அந்த வேலை எந்த நிலைமையிலே இருக்கிறது. பணிகள் தொடங்கப்படுமா, எப்போது தொடங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வேறு ஒரு மருத்துவமனையினுடைய விளக்கத்தை அவர்கள் கேட்கிறார்கள். அதற்கான குறிப்பு தற்போது இல்லை. தனியாகக் கேள்வி போட்டாலோ அல்லது நேரிடையாகவோ அவருக்கு அந்த விளக்கங்கள் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *365*, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

365—

மகப்பேற்றுப் பெண்களுக்கு மருத்துவ சிகிச்சை

**22619*—டாக்டர் அ. ஸ்ரீதரன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் மகப்பேற்றுக்கு வரும் பெண்களுக்கு "Re-assurance and Psycho-Prophylactic Approach" என்ற மருத்துவ சிகிச்சை முறையை தீவிரப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

மகப்பேறு சிகிச்சைப் பிரிவிற்கு வரும் கருவுற்ற தாய்மார்களுக்கு,